புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • நவம்பர் 30, 2023 • புரட்சி 23 • முழக்கம் 46 • விலை ரூ.3.00

# சென்னையில் சமூக நீதிக் காவலர் விபி.சிங் சிலை திறப்பு

## இது தமிழர்களின் நன்றி உணர்வு – முதல்வர்

***சென்னை: சென்னையில் விபி. சிங் சிலையை அரசு சார்பில் திறந்து வைத்த தமிழ்நாடு முதல்வர், இது தமிழர்களின் நன்றி உணர்வு என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்***

***சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் முழுஉருவ சிலையை திறந்து வைத்து, சென்னை, கலைவாணர் அரங்கில் நடந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:*** *150 ஆண்டு பழமைவாய்ந்த மாநில கல்லூரி வளாகத்தில், வி.பி. சிங்கின் அருமை நண்பர், கலைஞர் நீடுதுயில் கொண்டிருக்கின்ற கடற்கரை சாலையில் சமூகநீதியின் சின்னமாம் வி.பி. சிங் சிலை அமைக்கப்பட்டுள்ளது. எங்களுடைய அழைப்பை ஏற்று, இங்கு வந்துள்ள வி.பி. சிங் மனைவி சீதா குமாரிக்கும், அவருடைய மகன் அஜயா சிங்க்கும் உங்களுடைய அனைவரின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வி.பி. சிங் சிலை வைப்பது மூலமாக அவருடைய புகழ் உயருகிறது என்று பொருள் இல்லை; நாம் அவருக்கு காட்ட வேண்டிய நன்றியை காட்டி இருக்கிறோம்.*

*காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூகநீதிக் கதவை திறந்து வைத்தவர் வி.பி.சிங். தன்னுடைய பிரதமர் பதவி போனாலும் பரவாயில்லை என்று அதில் உறுதியாக இருந்தவர் வி.பி. சிங். அவர் பிறப்பால் பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் அல்ல. ஏன், ஏழை எளிய குடும்பத்தை சேர்ந்தவரும் அல்ல. ஆனாலும் ஏழை – எளிய, பிற்படுத்தப்பட்ட – ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இடஒதுக்கீட்டை சாத்தியப்படுத்தி காட்டியவர். அப்போது நாடாளுமன்றத்தில் பெரியார், அம்பேத்கர், ராம் மனோகர் லோகியா ஆகிய மூவருடைய பெயரைத்தான் வி.பி.சிங் குறிப்பிட்டார். பெரியாருக்கு தனிப்பட்ட நன்றியை நாடாளுமன்றத்தில் பதிவு செய்தார்.*

*பதவியில் இருந்த பதினோரு மாத காலத்தில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு, தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு தொடக்கப்புள்ளி, தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்திற்கு தொடக்கப்புள்ளி, வேலை உரிமையை அரசியல் சாசன உரிமை உருவாக்கியது, லோக்பால் சட்டத்துக்கு தொடக்க முயற்சிகள், தேர்தல் சீர்திருத்தங்கள், அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருது, நாடாளுமன்றத்தின் நடுவே அம்பேத்கர் படம், மாநிலங்களுக்கு இடையிலான கவுன்சில், உழவர்கள் பிரச்னையை தீர்க்க மூன்று குழுக்கள், டெல்லி குடிசைப்பகுதி மக்களுக்கு வாழ்விடங்கள், அதிகபட்ச சில்லறை விற்பனை விலை அச்சிட உத்தரவு, நுகர்வோர் பாதுகாப்பு – இன்னும் பட்டியல் நிறைய இருக்கிறது.*

*சமூகநீதியின் காவலரான வி.பி.சிங்குக்கு சிலை வைத்ததன் மூலமாக தமிழ்நாடு அரசு இன்றைக்கு பெருமை அடைகிறது. சமூகநீதிப் பயணத்தில் நாம் செல்ல வேண்டிய தூரம் மிக அதிகம். சமூகநீதி என்பது ஒரு மாநிலத்தின் பிரச்னை இல்லை; எல்லா மாநிலங்களின் பிரச்னை. ஒவ்வொரு மாநிலத்துக்கும் சாதி – வகுப்பு அளவீடுகள் வேறுபடலாம். ஆனால் பிரச்னை ஒன்றுதான். அதுதான், புறக்கணிப்பு. எங்கெல்லாம் புறக்கணிப்பு – ஒதுக்குதல் – தீண்டாமை – அடிமைத்தனம் – அநீதி இருக்கிறதோ, அங்கெல்லாம் அதை முறிக்கின்ற மருந்தாக இருப்பதுதான் சமூகநீதி.*

*தாமதப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்போடு சாதிவாரி கணக்கெடுப்பையும் ஒன்றிய அரசு நடத்த வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முழுமையாக முறை யாக வழங்கப்பட வேண்டும். பட்டியலின – பழங்குடியின மக்களுடைய இட ஒதுக்கீடும் முறையாக வழங்கப்பட வேண்டும். சிறுபான்மையினர் இட ஒதுக்கீடும் முறையாக வழங்கப்பட வேண்டும். இதையெல்லாம் அகில இந்திய ரீதியில் கண்காணித்து, உறுதி செய்ய அனைத்து கட்சி எம்.பிக்கள் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும்*

*இதனையெல்லாம் அகில இந்தியளவில் சமூகநீதியில் ஆர்வம் கொண்ட அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒற்றுமையாக இணைந்து மக்கள் நலனுக்காகச் செயல்பட வேண்டும். சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் சிலை திறப்பு நாளில் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டிய உறுதிமொழி; “இந்தியா முழுமைக்கும் வாழும் பிற்படுத்தப்பட்ட – பட்டியலின பழங்குடியின சிறுபான்மை – விளிம்பு நிலை மக்களுடைய உயர்வுக்கான ‘அரசியல் செயல் திட்டங்கள்’ ‘அரசின் செயல் திட்டங்களாக’ மாற்றி அமைக்க இன்றைக்கு உறுதி ஏற்போம். ‘வி.பி.சிங் மறையலாம். அவர் ஏற்றி வைத்த சமூகநீதி தீபம் அணையாது. அவரை யார் மறந்தாலும், தமிழ்நாடு மறக்காது. திராவிட மாடல் அரசு மறக்காது’ இவ்வாறு அவர் பேசினார்.*



### ஒன்றிய அரசு துறைகளில் பார்ப்பன ஆதிக்கம்

ஒன்றிய அரசு துறை செயலர்களில் 89 பேரில் 85 பேர் உயர் சாதியினர். பல்கலைக்கழக மானியக்குழு இணை இயக்குநர் பதவிக்கு இடஒதுக்கீடே கிடையாது. ஒன்றிய அரசின் துறை செயலாளர்கள் 89 பேரில் 85 பேர் உயர்சாதியினர். கூடுதல் செயலாளர்கள் 93 பேரில், 82 பேர் உயர்சாதியினர். பிற்படுத்தப்பட்டவர் கிடையாது. ஒன்றிய அரசு துறைகளின் இணை செயலாளர்கள் 275 பெயரில், 19 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள். அசாம், உத்தரபிரதேசம், சட்டீஸ்கர், ஜார்கண்ட் உள்ளிட்ட பல மாநிலங்களில் இருக்கின்ற மத்திய சட்டப் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கையில் இந்த ஆண்டு வரை இடஒதுக்கீடே இல்லாத நிலைதான் நீடிக்கிறது. 45 மத்திய பல்கலைக்கழகங்களில், பிற்படுத்தப்பட்ட பிரிவை சேர்ந்த பேராசிரியர்கள் 4 விழுக்காடு மட்டும்தான். இப்படித்தான் பல்வேறு துறைகளில் இன்றைக்கும் நிலைமை இருக்கிறது.

சரி, நீதிமன்றங்களில் சமூகநீதியின் நிலை என்ன? 2018 முதல் 2023 வரை நாடு முழுவதும் உயர் நீதிமன்றங்களில் நியமிக்கப்பட்ட 604 நீதிபதிகளில், 72 பேர் மட்டும்தான் பிற்படுத்தப்பட்ட பிரிவை சேர்ந்தவர்கள். ஆனால், 458 பேர் பொதுப்பிரிவை சேர்ந்தவர்கள். உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு முறை அமல்படுத்தப்படவில்லை. ஏன், அரசு துறைகளின் பதவி உயர்வுகளின் போது இடஒதுக்கீடு முறை நடைமுறைப்படுத்தபடவில்லை. இந்த நிலையை எல்லாம் மாற்றுவதற்குதான் நாம் தொடர்ந்து உழைக்க வேண்டும். – தமிழக முதல்வர் உரையில் இருந்து

### பிறப்பில் பாகுபாடு பார்த்தால் எப்படி அங்கு நடுநிலை இருக்கும்: வி.பி.சிங் மகன் அஜயா சிங் பேச்சு

வி.பி.சிங் மகன் அஜயா சிங் பேசியதாவது: இந்த நாள் எனக்கு சிறந்த நாள், என் இதயத்தில் இருந்து நன்றி கூறுகிறேன். இங்கு என்ன சொல்லுவது என்று தெரியவில்லை. அதனால் என் மகள் 1995 அல்லது 1996ல் என் தந்தை ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் இருந்த போது உருவாக்கிய பேச்சை என்னிடம் அளித்தார். அதனை இங்கே பகிர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இந்த பேச்சுக்கு பிறகு 4 மாதத்தில் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில், ‘இந்தியாவில் சமூகம் மற்றும் அரசியல்’ என்ற பாடத்திட்டம் உருவாக்கப்பட்டது. மிக நீளமான அப் பேச்சை சுருக்கி கூறுகிறேன்.

ஜனநாயகம் என்பது வெறும் வாக்குச் சீட்டு மட்டும் அல்ல, அது அரசாங்கத்தில் உள்ள மனிதனின் மாண்பு. ஒருவரின் கால் மற்றொருவரின் தலை மீது இருந்தால் அது எப்படி ஜனநாயகம் ஆகும். ஒருவனை பிறப்பால் பாகுபாடு பார்த்தால் எப்படி அங்கு நடுநிலை இருக்கும். இதை எல்லாம் ஒழிக்க வேண்டும் என்றால் அரசு மட்டும் போதாது, இட ஒதுக்கீடு போன்றவையே இதை ஒழிக்க உதவியாக இருக்கும் என்று அவர் கூறினார். என் தந்தைக்கு இத்தகைய மரியாதை அளித்ததற்கு மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய குடும்பம் நீங்கள் செய்ததை எப்போதும் மறக்காது.

## தலையங்கம்

# சுரங்கத்தில் சிக்கித் தவிக்கும் தொழிலாளர்கள்

உத்தரகாண்ட் மாநிலத்தில் புண்ணிய ஸ்தலங்களை இணைத்து பக்தர்களின் பயண நேரத்தை ஒரு மணிநேரம் குறைப்பதற்காக ‘சார்தம் பரிபோஜனா’ என்ற திட்டத்தை பாஜக ஆட்சி அமுல்படுத்த முன்வந்த போது, இது ஆபத்தானது என்று உள்ளூர் மக்கள், விஞ்ஞானிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனாலும் புண்ணிய யாத்திரை வரும் பக்தர்களுக்கு நாங்கள் உதவி செய்வதைத் தடுக்கவே முடியாது என்று பிடிவாதத்துடன் செயல்பட்டதால் 41 தொழிலாளர்கள் சுமார் 20 நாட்கள் சுரங்கத்திற்க்குள் சிக்கித்தவிக்கிறார்கள். (அவர்கள் மீட்கப்படப் போகிறார்கள் என்ற செய்தி இதை எழுதும் போது கிடைத்தது) சுரங்கத்திற்குள் வாழ்வா? சாவா? என்ற போராட்டத்தில் தவிக்கும் தொழிலாளர்கள் உயிருடன் திரும்புவார்களா? என்ற அச்சம், பீதியுடன் மன அழுத்தத்துடன் குடும்ப உறுப்பினர்கள் தவிக்கிறார்கள். நெடுஞ்சாலை (எண் : 34) யில் 900 கி.மீ தூரத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டுமானால் சுரங்கம் அமைக்க வேண்டும். மாற்றுப்பாதைகள், பாலங்களை உருவாக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இமயமலையைக் குடைந்து சுரங்கப் பாதை தோண்ட வேண்டும். இது மிகமிக ஆபத்தானது. நிலச்சரிவுகள் உருவாகும் ஆபத்துகள் உண்டு என்று விஞ்ஞானிகள் கடுமையாக எச்சரித்தனர்.

இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு வந்த போது ‘தேசிய பாதுகாப்புக்கு – இந்தப் பாதை அவசியம் என்று அரசு முன்வைத்த வாதத்தை ஏற்றுக்கொண்டு உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கியது. உச்சநீதிமன்றம் அனுமதித்துவிட்டதால் சுற்றுச்சூழல் விதிமுறைகளை ஆட்சி புறந்தள்ளியது. இந்த திட்டத்திற்கு செய்யப்படும் ஒவ்வொரு பணியையும் இணைத்து ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் மதிப்பீட்டைப் பெற வேண்டும் என்பது விதி. இதை அந்த ஆட்சி முற்றாகப் புறந்தள்ளியது. ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியே சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதியைப் பெற்று பாதிப்பு பற்றி கவலைப்படாமல் திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கியது.

மதம் தொடர்பான திட்டம் என்றால் எந்த விதிமீறலையும் செய்யலாம் என்பதே எழுதப்படாத சட்டமாக இருக்கிறது. இமயமலையில் தொழில்நுட்பங்களை பயன்படுத்தும் திட்டங்கள் எல்லாம் இதுவரை தோல்வியையே சந்தித்திருக்கிறது. அணைகள் உடைவதும், சாலைகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்படுவதும் வழக்கமாகிவிட்டது என்று விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். நகரங்களில் மலை இல்லாத பகுதிகளில் செயல்படுத்துவது போல இமயமலைப் பகுதியில் செயல்படுத்த முடியாது என்ற அடிப்படையைக் கூட புரிந்து கொள்ளாமலே இத்திட்டத்தை மதவாத ஆட்சி நிறைவேற்ற முன்வந்திருக்கிறது என்று விஞ்ஞானிகள் குற்றம்சாட்டுகிறார்கள்.

சுமார் ஒரு மணிநேர பயணத்தைக் குறைப்பதற்காக இப்படி ஒரு ஆபத்தான திட்டம் தேவையா? இது அவசர முக்கியத்துவம் பெற்ற திட்டமா என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன. பக்தி, மதம் என்றாலே அறிவியல், பொது ஒழுங்கு பற்றி கவலைப்படத்தேவையில்லை என்ற முடிவுக்கு மதவாதம் உந்தித்தள்ளுகிறது.

குஜராத், உபி, பிஹார் மாநிலங்களில் திருவிழாக்களில் கூடும் பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு செய்வதில்லை. கூட்ட நெரிசலில் சிக்கி மரணிப்பதும், பயணிக்கும் பாலங்கள் உடைந்து கீழே விழுந்து பக்தர்கள் உயிர் இழப்பதுமான செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சி பல இலட்சம் மக்கள் கூடும் திருவிழாக்களை உரிய பாதுகாப்புடன் நடத்தி பக்தர்களைப் பாதுகாத்து வருகிறது. ஆனால் ‘இந்து விரோத ஆட்சி’ என்று பாஜக கூப்பாடு போடுகிறது. தொழிலாளர்களின் உயிரைப் பணயம் வைத்துத் தான் புண்ணியம் தேட வரும் பக்தர்களுக்குப் பாதை அமைக்க வேண்டுமா? இந்த மதவெறிப் பார்வை வன்மையான கண்டனத்துக்கு உரியது.

# இதுதான் ‘சனாதன தர்மம்’

தேவதாசி முறை ஒழிப்பு சட்டம் கொண்டுவர இடைவிடாது போராடிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி வாழ்க்கை வரலாற்றை தமிழ்’இந்து’ நாளேட்டின் ‘பெண்’ இணைப்பு இதழ் வெளியிட்டுவருகிறது.

1907ல் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மருத்துவப் படிப்பு படிக்க விரும்பிய போது அதை மருத்துவர்கள் வரவேற்கவில்லை. ஒன்று அவர் பிறந்த பிறப்பு ஒடுக்கப்பட்ட ஜாதி; மற்றொன்று அறுவை சிகிச்சை படிப்பை படிக்க விரும்பியதை ஏற்க மறுத்தார்கள். தனது திறமையால் அந்த மூடநம்பிக்கையை தகர்த்தார் முத்துலட்சுமி ரெட்டி.

சுப்புலட்சுமி என்ற மற்றொரு பெண் 13 வயதிலேயே கனவரை இழந்துவிட்டார். அவரை ‘விதவையாக்கி’ சமூகம் அவமானப்படுத்துவதை முத்துலட்சுமி ரெட்டியால் சகித்துக்கொள்ள முடியவில்லை. கணவரை இழந்த பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் சாரதா மையத்தை மைலாப்பூரில் இருவரும் இணைந்து தொடங்கினர். அதற்கு நிதியுதவி அளித்துவந்த சிலர் அந்த இயக்கத்தில் ‘பார்ப்பனரல்லாத’ பெண்களை சேர்க்க கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தனர். இதுதான் சனாதன தர்மம் காட்டிய வாழ்க்கை முறை.

## வழிகாட்டும் தமிழ்நாடு ; அகிலேஷ் பேச்சு

சென்னையில் விபி.சிங் பிறந்தநாள் விழாவில் பங்கேற்று பேசிய உபி முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ் “ஜாதிவாரி கணக்கெடுப்பு தேவை என்று நாம் பேசுகிறோம். அனைத்து பிரிவினருக்கும் கல்வி, வேலைவாய்ப்புகளில் உரிய பிரதிநிதித்துவம் என்பதற்காக கேட்கிறோம். ஆனால் அனைத்துத் துறைகளையும் ஒன்றிய ஆட்சி தனியார்மயாக்கி இட ஒதுக்கீட்டையே ஒழித்துவருகிறது. போராடிப் பெற்ற உரிமைகள் பறி போகின்றன. எனவே நமது போராட்டம் அம்பேத்கர், ராம் மனோகர் லோகியா வழியில் தொடரவேண்டியிருக்கிறது.

மண்டல் பரிந்துரையை விபி.சிங் அமுல்படுத்திய போது உயர்ஜாதி மாணவர் ஒருவர் இட ஒதுக்கீடே கூடாது என்று தீக்குளித்தார். இப்போது உயர்ஜாதியினரே தங்களுக்கு 10 சதவீத தனி ஒதுக்கீடு பெற்றுவிட்டார்கள். நாங்கள் கேட்பதெல்லாம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எங்களுக்கு மறுக்கப்பட்ட நீதி கிடைக்க வேண்டும் என்பதுதான். அந்த நீதி வழங்கிய பிரதமர் விபி.சிங் சிலை தான் இங்கே திறக்கப்பட்டுள்ளது.

மண்டல் ஆணையம் வருவதற்கு முன்பே தமிழ்நாட்டில் சமூகநீதிப் போராட்டம் தொடங்கிவிட்டது. மாபெரும் சமூகசீர்திருத்தவாதி பெரியார் ராமசாமி அதைத் தொடங்கிவிட்டார். கலைஞர் மற்றும் பல தலைவர்கள் இதற்காக போராடினார்கள். அந்த தலைவர்கள் காட்டிய இலட்சியப்பாதையில் நீங்கள், அந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறீர்கள். சமூகநீதியிலும், சுயமரியாதையிலும் நம்பிக்கையுள்ள அனைவரும் அந்தப் போராட்டத்தில் இணைந்து நிற்பார்கள் என்றார் அகிலேஷ் யாதவ்.

# சேலம் பெரியார் பல்கலையில் தனியார் கல்விக் குழுமமா?

### கழகத் தலைவர் எதிர்ப்பு

***சேலம் பெரியார் அரசு பல்கலையில் தனியார் பவுண்டேஷன் மற்றும் தனியார் கல்வி குழுமம் (கம்பெனி) தொடங்குவதற்கு திராவிடர் விடுதலைக் கழகம் கடும் கண்டனம்***

***இது குறித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்டுள்ள அறிக்கை :***

சேலம் பெரியார் பல்கலையில் அண்மையில் நடை பெற்ற ஆட்சிக்குழு கூட்டத்தில் துணை வேந்தரின் செயல் பாடுகள் அரசின் பிரதிநிதிகளால் கடும் கண்டனத்திற்கு உள்ளாக்கப்பட்டு உள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ள நிலையில் மேலும் ஒரு அதிர்ச்சி தகவல் வெளி வந்துள்ளது .

சேலத்தில் பெரியார் பல்கலைத் தொடங்கிய நோக்கமே சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பட்டியலின, பழங்குடி ஏழை மாணவர்களின் கல்வித் தரத்தை வளர்க்கவே ஆகும். அதைச் சிதைக்கும் வகையில் அண்மையில் பூட்டர் பவுண்டேஷன் என்ற தனியார் கம்பெனி கல்வி நிறுவனத்தை பெரியார் பல்கலையில் துவக்க கடந்த 6ம் தேதி நடைபெற்ற ஆட்சிக்குழுவில் டேபிள் அஜெண்டா வைத்து உள்ள தாக தெரிய வருகிறது . இதன் இயக்குநர்கள் யார் எனில் துணை வேந்தர் திரு. ஜெகநாதன், பதிவாளர் பொறுப்பு தங்கவேல், கணினி அறிவியல் துறை இணைப் பேராசிரியர் சதீஸ், இவர்களோடு திருச்சி பாரதிதாசன் பல்கலைப் பேராசிரியர் ஒருவர். பொதுவாக அரசு ஊழியர் ஒருவர் தனியார் நிறுவனமோ வணிகமோ துவங்க வேண்டுமானால் அரசின் முன் அனுமதி பெற வேண்டும். அரசுப் பணியினில் இருந்து பணித்துறப்பு செய்த பிறகு தான் தனியார் கம்பெனியினைத் தொடங்க முடியும். மேலும் ஒரு தனியார் நிறுவனத்தில் பங்குகளை வாங்கவோ முதலீடு செய்யவோ வேண்டும் என்றால் பல நடைமுறைகளைப் பின்பற்றியும் ஆட்சிக்குழுவில் ஒப்புதல் பெறவும் வேண்டும். ஆட்சிக் குழுவின் ஒப்புதலை அரசுக்கு அனுப்பி அரசின் அனுமதி பெற வேண்டும். அப்படி பெற்றால் தான் அரசு ஊழியரின் பணிக்கு எவ்வித பாதிப்பும் இருக்காது. ஆனால் இந்த நடைமுறை எதையும் கடை பிடிக்காமல் தன்னிச்சையாக அரசுக்கு தெரிவிக்காமலேயே துணை வேந்தர் தன்னையும் ஒரு இயக்குநராக வைத்து பெரியார் பல்கலையில் தனியார் கம்பெனியை சட்டத்திற்கு விரோதமாக பூட்டர் என்ற தனியார் கம்பெனியை கம்பெனி பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து உள்ளார். இது முழுக்க முழுக்க சட்டத்திற்கு விரோதமானது; அரசுக்கும் எதிரானது; மேலும் பெரியார் பல்கலையை தனியார் வியாபார நிறுவனம் ஆக்கும் செயலுமாகும். இது நடைமுறைக்கு வந்தால் புதிய பாடங்களை அவர்களே துவங்கலாம். அவர்கள் யாருக்கு வேண்டுமானாலும் பாடங்களை நடத்த அனுமதி கொடுக்கலாம் பாடங்களை விற்கலாம். பாட கட்டணம் தேர்வுக் கட்டணம் எல்லாம் அவர்களே நிர்ணயம் செய்யலாம். பல்கலை உபகரணங்கள், பல்கலையின் இடம், ஆய்வகம் ஆகியவற்றைத் தனியார்கள் பயன் படுத்திக் கொள்ளலாம். அதற்கு பல்கலைக்கு எதுவும் தர வேண்டாம்.

இவர்களிடம் பல கம்பெனிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு எங்கு வேண்டுமானாலும் கல்வி நிறுவனம் துவங்கலாம். அரசுக்கோ பல்கலைக்கோ இவர்கள் எந்தத் தகவலையும் தெரிவிக்க வேண்டியது இல்லை. தனியார் கம்பெனியினை பல்கலையில், அதுவும் பல்கலை அதிகாரிகளே துவங்குவதை அரசு அனுமதிக்கக் கூடாது. இனியும் அரசு வேடிக்கை பார்த்து கொண்டு இருக்க கூடாது. தனியார் கல்வி துவங்கினால் மாணவர்களிடம் இருந்து கொள்ளை கட்டணம் வசூல் செய்வார்கள். சமூக நீதி, இட ஒதுக்கீடு காற்றில் பறக்கும் நிலைக்கு தள்ளப் படும்.

ஆகவே தமிழக அரசு உடனடியாக தலையிட்டு அரசுக்கு எதிராக செயல் பட்டு வரும் துணை வேந்தர், பதிவாளர், கணினி அறிவியல் துறை பேராசிரியர் சதிஷ் இவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவர்களின் நலன் கருதி உடனடியாக அரசுக்குத் தெரிவிக்காத பல்கலை அதிகாரிகள் சட்டத்திற்கு புறம்பான இயக்குனர்கள் மீது கிரிமினல் நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டும்.

அதுவரையில் துணை வேந்தர் கூட்டிய ஆட்சிக் குழுவின் தீர்மானங்களை நிறுத்தி வைத்திட வேண்டும். இனி அரசின் செயலாளர் தலைமையில் தான் ஆட்சிக் குழு கூட வேண்டும். மேலும் ஆட்சிக் குழு தீர்மானங்களை பொது மக்கள் கல்வியாளர்கள் அறியும் வகையில் பல்கலை இணைய தளத்தில் இதுவரை வெளியிட்டு வந்தததுபோல மீண்டும் வெளியிட வேண்டும்.

சேலம் பல்கலையின் இந்நடவடிக்கைகள் அனைத்தையும் ஆளுநர் மீதான உச்ச நீதிமன்ற வழக்குகள் முடிவதற்குள் செய்து முடித்திட வேண்டும் என்ற அவசரத்தைத்தான் காட்டுகின்றன.

தமிழ்நாடு அரசு, குறிப்பாக உயர்கல்வித்துறை உடனடியாக தலையிட்டு இச்சட்டவிரோத முன்னெடுப்புகளைத் தடுத்திட வேண்டும் என திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

## விபி.சிங் திருச்சியில் நிகழ்த்திய உரை

# ‘வர்ணாஸ்ரம’ தலையில் சுயமரியாதை என்ற ஆணியை அடித்தவர் பெரியார்

*28.12.1992 அன்று திருச்சி பெரியார் நினைவு நூற்றாண்டு கல்வி வளாகத்தில் நடைபெற்ற பெரியார் நினைவு நாள் - குழந்தைகள் காப்பகக் கட்டிடத் திறப்பு விழாவில் நிகழ்த்திய உரை:*

பெரியார் இறந்த பிறகும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று சொன்னால், அவருக்குப் பின்னாலே இருக்கின்ற மக்களின், வருகின்ற சந்ததியினரின் உள்ளங்களிலே, அவரது கருத்துகள் நிறைந்திருக்கின்றன என்றால், அவர் சாகவில்லை என்பதைக் காட்டுகிறது. மாறாக, அவர் என்றைக்கும் மக்கள் நெஞ்சில் நிறைந்து இருக்கிறார் என்றுதான் நான் சொல்வேன்.

ஒரு மனிதனுக்குச் சாவைவிட மிகக் கொடுமையானது, ‘அவமானம்’ என்றே நான் சொல்லுவேன். இந்த நாட்டிலே கோடிக்கணக்கான மக்கள் சமூக அநீதியால், அவமானத்தால் பாதிக்கப் பட்டார்கள். நெருப்பிலே வெந்து கொடுமைப் படுவதைவிடக் கொடுமையானதுதான் இந்த அவமானத்தால் ஏற்படுகின்ற கொடுமை. பசியால், வயிறு பற்றி எரிகிறது. ஆனால், மனத்தில் அவமானம் என்ற நெருப்புப் பற்றி எரிந்தால், இந்த நாட்டில் புரட்சிதான் வெடித்துக் கிளம்பும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதை உணர்ந்ததால் தான், பெரியார், சுயமரியாதை என்ற முழக்கத்தைத் தந்தார்கள். அந்தச் சுயமரியாதை என்ற முழக்கத்தைத் தந்ததால்தான், ஆயிரம் ஆயிரமாண்டு காலமாய், இந்த நாட்டிலே இருக்கக் கூடிய சமூக அநீதியை, நாம் புரிந்து கொள்ள முடியும் என்று நமக்குக் கற்றுக் கொடுத்தார்.

ஒரு மனிதனை அழிக்க வேண்டுமா? அப்படி அழிக்கவேண்டும் என்று சொன்னால், செல்வத்தை அழிப்பதால் அவன் அழிவதில்லை; ஆரோக்கியத்தை அழிப்பதால் அவன் அழிவதில்லை; ஆனால், அவனை முழுமையாக அழிக்க வேண்டுமானால், அவனுடைய மானத்தை அழித்து விட்டால், அவன் அழிந்து விடுவான் என்பதை, நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இதைத் தான் சாதி செய்து கொண்டிருக்கிறது.

சாதி என்ன செய்து கொண்டிருக்கிறது? என்று சொன்னால், அது உள்ளத்தை அடிமைப்படுத்தியிருக்கிறது. இந்த நாட்டிலே இருக்கக் கூடிய கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களை, சிந்தனையை அடிமைப்படுத்தி யிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். கை களிலே போடப்பட்ட இரும்புக் கைவிலங்கு களை நாம் உடைத்தெறிய முடியும். ஆனால், மனத்திலே, அறிவிலே பூட்டப்பட்டிருக்கின்ற விலங்கினை நாம் உடைத்தெறிய முடியாது. அந்த விலங்குகளை உடைத்தெறியத்தான், நமக்குச் சுயமரியாதை என்ற உணர்வு வேண்டும்.

‘ரோபோ’ என்று சொல்லக்கூடிய எந்திர மனிதன், அது மனிதனை விடத் திறமையாக, எல்லாச் செயல்களையும் செய்யக்கூடிய ஆற்றல் படைத்தது. ஆனால், அதற்கு மனிதனுக்கு இருக்கக்கூடிய ஒன்று இல்லை. அதுதான் மனம் என்ற ஒன்று, உள்ளம் என்று ஒன்று அதற்கு இல்லை.

இந்த நாட்டிலே இருக்கக்கூடிய, தாழ்த்தப்பட்ட மக்களைச் சூத்திரன் என்று சொல்லப்படுகின்ற பிற்படுத்தப்பட்ட மக்களை, வருணம் என்று சொல்லக்கூடிய சாதி என்கிற அமைப்பு, அவர்களுடைய உள்ளங்களிலே விலங்கை மாட்டி, அடிமைப்படுத்தி வைத்திருக் கிறது. தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களை எந்திர மனிதர்களாக்கி இருக்கிறது. ஆகையால் தான் பெரியார், சுயமரியாதை என்ற ஆணியை மிகச் சரியாக அதனுடைய தலையில் அடித்தார்.

ஒரு தாழ்த்தப்பட்டவன், செல்வந்தன் ஆனால் இந்தச் சமுதாயம் எதிர்ப்பதில்லை. அதை ஏற்றுக் கொள்கிறது. அதே சமயம் அவன் சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வந்தால், அவனுடைய தலை வெட்டப்படுகிறது. ஆக, இன்றைக்கு இருக்கக் கூடிய சிக்கல்களுக்கு அடித்தளம் என்ன? சமுதாயத்தில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களை உயர்த்துவது எப்படி என்பதுதான் அந்தச் சிக்கல். அந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணப் பாடுபட்டவர்கள் தான் டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களும். பெரியார் அவர்களும். மனிதன் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும், வாழ வேண்டும் என்பதுதான், பெரியார் அவர்களுடைய கொள்கை; டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய கொள்கை.

நாம் 400 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள வரலாற்றுக்குச் செல்வதைவிட, 4000 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள வரலாற்றுக்குச் செல்வோம். 4000 ஆண்டுகளுக்கு முன்னாலே இந்தியாவிலே ஒரு படையெடுப்பு நடந்தது. அந்தப் படையெடுப்பிலே கைபர், போலன் கணவாய் வழியாக இந்த நாட்டுக்கு வந்தவர்கள், இங்கே இருந்த மக்களை அடிமைப்படுத்தி விட்டார்கள். அவர்களைத் தசுயூக்கள் என்று சொன்னார்கள். அந்தத் தசுயூக்கள் தான் இன்றைக்குப் பஞ்சமர்களாகச், சூத்திரர்களாக இருக்கிறார்கள். எனவே, அப்போது ஏற்பட்ட அடிமைத்தனம் ஒழிந்தாலொழியப் பிரச் சினைகள் தீராது.

இங்கே, அரசியலிலே ஈடுபட்டு, எம்.எல்.ஏ.க்களாக, எம்.பி.க்களாக வருகிறார்கள். ஏன்? அமைச்சர்களாகக் கூட வருகிறார்கள்.

> • கையில் பூட்டப்பட்டுள்ள விலங்கை உடைக்கலாம். உள்ளத்தில் அறிவில் பூட்டப்பட்ட விலங்கை உடைப்பது கடினம்
>
> • 4000 ஆண்டுகளுக்கு முன்பு கைபர், போலன் கணவாய் வழியாக படை எடுத்துவந்தவர்கள் இங்கே வாழ்ந்த மக்களை ‘தஸ்யூக்கள்’ என்று அவமதித்தனர்.
>
> • 3000 ஆண்டுகளாக வாய்ப்புகளைத் தடுத்தவர்களே ‘தகுதி’ பற்றி பேசுகிறார்கள்.

ஆனால் மண்டல் அமுலாக்கம் என்பது வெறும் சம்பளத்திற்கான, வேலை வாய்ப்பு மட்டுமல்ல; அதிகாரவர்க்கத்தில் நமக்குப் பங்கு கிடைக்க வேண்டும் என்பது தான். ஏனென்றால், சாதாரணமான ஏழைமக்களுக்கான ‘ரேசன்கார்டு’ கிடைப்பதைக்கூட முடிவெடுப்பது அதிகார வர்க்கம்தான். எனவேதான், மண்டல் அமுலாக்கம் என்பது, அதிகாரப் பங்கீடு என்கிறோம். திராவிடர் கழகத்தை எங்களோடு ஒப்பிட மாட்டேன். ஏனென்றால், அது அரசியலிலே ஈடுபடக் கூடிய இயக்கமல்ல. ஆனால், அரசியலில் ஈடுபடுகின்ற கட்சிகளில், எங்களுடைய சனதாதளம் தான் கட்சிப் பொறுப்புகளில் 60 சதவிகிதத்தைப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்களுக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதே போல், நாட்டின் அனைத்து அதிகார மட்டத்திலும் ஒதுக்கீடு செய்யப்பட்டா லொழிய, நாட்டில் முன்னேற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை.இந்த நிலையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்திய நாட்டிலுள்ள அரசியலாக இருந்தாலும், அதிகார வர்க்கமாக இருந்தாலும், அரசியல் கட்சித் தலைமையாக இருந்தாலும், தொழில் துறையாக இருந்தாலும், எல்லா வற்றிலும் முடிவெடுக்கின்ற இடத்தில், மேல்சாதிக்காரர்களே இடம் பெற்றிருக் கிறார்கள். பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை, அந்த இடங்களில் காண முடியாத நிலை, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து கொண்டு இருக்கிறது. இதைப் பற்றி யாரும் பேசவில்லையே! ஏன்?

2000 ஆண்டுகளாகத் தங்களுடைய வாய்ப்புகளை இழந்தவர்களைப் பார்த்துத் தகுதி, திறமை இருந்தால், அவர்களுக்கு வேலை கிடைக்கும் என்கிறீர்கள். 3000 ஆண்டு காலமாகத் தகுதிகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள்; அந்த வாய்ப்பை 30 ஆண்டுகள் இவர்களுக்குக் கொடுத்தால், 30 ஆண்டுகளில் உங்களைவிட இவர்கள் முன்னேறிவிடுவார்கள்.

எடுத்துக் கொண்ட செய்தியைச் சொல்லப் போனால் நீண்டநேரம் பேசிக் கொண்டே இருக்கலாம். காலத்தின் அருமை கருதிக் கடைசியாகச் சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். கல்வி வேறு, அறிவு வேறு. அறிவு என்று சொல்லக் கூடியது இருக்கிறதே, அந்த அறிவு மனிதனுக்கு அதிகாரத்தைத் தர இருக்கிறது. அப்படி அறிவு அதிகாரத்தைத் தருகிறது என்பதை ஈராயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே அவர்கள் உணர்ந்தார்கள். அதனால்தான் அதிகாரத்தைத் தங்கள் கையிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று கருதி, ஒன்றைச் செய்தார்கள். மற்றவர்கள் படித்து அறிவு பெறக் கூடாது என்று நினைத்தார்கள். அப்படி நினைத்ததால்தான், சூத்திரர்கள் வேதத்தைப் படித்தால், அவர்கள் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு அறிவுத் துறையைத் தங்கள் கையிலே ஏகபோகமாக வைத்துக் கொண்டார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை, தொழில் நுணுக்கங்களைக் கொடுக்க மறுத்தார்கள். இருந்த போதிலும் தானாகவே முயன்று ஏகலைவன் (வில் வித்தையைக்) கற்றுக் கொண்டான். அவனது கட்டை விரலையே வெட்டி விட்டார்கள். முன்னேறிய நாடுகளிலிருந்து எதை வேண்டுமானாலும் தர இருக்கிறார்கள்; பணம் தரத் தயாராக இருக்கிறார்கள்; பொருள்களைத் தரத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், பொறியியற் கல்வியைத் தர மறுக்கிறார்கள்.

இந்த நாட்டிலே இருக்கக் கூடிய கல்வி முறைகூட, நாட்டில் இருக்கிற ஏற்றத் தாழ்வுகளை நிலை நிறுத்துகின்ற கல்வி முறையாக இருக்கிறது. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய மிகப் பெரிய நிர்வாகங்களுக்கு எல்லாம் போகக் கூடியவர்களுக்கு, மிகப் பெரிய கல்வி தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட கல்வியைப் பெரும் வசதி படைத்தவர்கள்தான் பெற முடியும் என்ற நிலை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இன்றைக்கு இருக்கக்கூடிய கல்வி முறை ஒடுக்கப்பட்ட மக்ககளிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கக் கூடிய ஒன்றாகத்தான் இருக்கிறது.

புரட்சி என்பது வாளைத் தூக்கிக் கொண்டு மட்டும் செய்ய முடியாது. மக்கள் மனத்தில் எழுகின்ற மலர்ச்சியை வைத்துத் தான் செய்ய முடியும். அப்படிப்பட்ட பணியை நாங்களெல்லாம் செய்கின்ற பணியைவிட, உயர்ந்த பணியை, நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். எனவே, உங்களைப் பாராட்டுகிறோம்.

அண்மையிலே விடுதலை பெற்ற நாடுகள் இந்தியா ஆயினும், வங்காள தேசம் ஆயினும், பாகிஸ்தான் ஆயினும், மூன்று இலக்குகளை வைத்திருக்கின்றன. ஒன்று நாட்டினுடைய ஒருமைப்பாட்டை முன்னேற்றுவது; இன்னொன்று மக்கள் நாயகத்தை நிலைநிறுத்துவது; மூன்றாவது நவீன மயமாக்குவது. இதிலே நான் முதலில் ஒன்றை எடுத்துக் கொள்கின்றேன். ஒருமைப்பாடு பேசுகிறவர்கள், ஒருவன் பிறக்கும்போது, சாதியின் அடிப்படையில் உயர்வு, தாழ்வு என்று சொல்கிறார்கள் என்றால், சமுதாய இணக்கம் இல்லை என்றால், சமுதாய ஒற்றுமை இல்லை என்றால், நாட்டு ஒற்றுமை எப்படி வரும் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

இரண்டாவதாக, மக்கள் நாயகம் என்பது வெறும் வாக்குச் சீட்டிலே இல்லை; ஒருவனுடைய கால், இன்னொருவனுடைய தலையிலே இருக்கக்கூடிய இந்தச் சமுதாய அமைப்பில், சமூக நீதி இல்லாமல், சமுதாயச் சமத்துவம் என்பது இல்லை. சமுதாயச் சமத்துவம் இல்லை என்று சொன்னால், மக்கள் வாழ்வு இருக்க முடியாது. மக்கள் வாழ்வு இல்லையென்றால் மக்கள் நாயகம் எப்படி இருக்க முடியும்?

இப்படிச் சமுதாயத்திலே, சமூக அநீதி இருக்கும் போது, மூன்றாவதாக உள்ள நவீன மயமாக்குவதை எப்படிச் செய்ய முடியும்? இன்றைக்கு வகுப்பு வெறியானது இந்த நாட்டிலே பரவிக் கொண்டிருக்கிறது. அந்த வகுப்புவெறி மறைய வேண்டும் என்று சொன்னாலும்கூட அதன் மூலத்தைப் பார்க்க வேண்டும்.

வகுப்புவாதத்தின் மூல ஊற்று எங்கிருந்து புறப்படுகிறது என்பதை ஆராய வேண்டும். வகுப்புவாதத்துக்கு எதிராக நாம் மதச்சார்பின்மை வேண்டும் என்கிறோம். ஆனால் மதச்சார்பின்மை மட்டுமே வகுப்புவாதத்தை ஒழித்துவிடாது. அத்துடன் கட்டாயமாக சமூக நீதியும் இணைந்தாக வேண்டும்!

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சட்ட எரிப்புப் போராளிகள் வீரவணக்க நாள்

***1957 – நவம்பர் 26ல் பெரியாரின் ஆணையை ஏற்று ஜாதியை பாதுகாக்கும் சட்டப் பிரிவை எரித்து சிறை சென்ற தோழர்கள் – உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் கூட்டங்கள் கழக சார்பில் நடத்தப்பட்டன.***




**பொள்ளாச்சி :** நவம்பர் 26, 1957ல் ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை எரித்த வீரர்களை நினைவு கூறும் கருத்தரங்கம், நவம்பர் 26, மாலை 6 மணிக்கு பொள்ளாச்சி பர்வாணா அரங்கில் நடைபெற்றது.

நிகழ்விற்கு யாழ். வெள்ளிங்கிரி தலைமை வகித்தார், ஆனைமலை அரிதாசு முன்னிலை வகித்தார், சபரிகிரி வரவேற்புரையாற்றினார். முதல் நிகழ்வாக பாடகர் கண்ணையன் – வினோதினி ஆகியோரின் கொள்கைப் பாடல்களை பாடினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை எரித்து சிறை சென்று உயிர் நீத்த பெரியார் தொண்டர்களின் வீர வரலாற்றை – அவர்கள் எதிர்கொண்ட சிறை அடக்குமுறைகள் குறித்து சுமார் 2 மணிநேரம் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவை துணைப் பொதுச்செயலாளர் காசு.நாகராசன், திமுக நகரச் செயலாளர் இரா. நவநீதகிருஷ்ணன், ம.வி.முன்னணி தலைவர் கா.மாரிமுத்து, ஆதித்தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் தி.செ.கோபால், தமிழ்ப் புலிகள் கட்சி மாவட்டச் செயலாளர் வானுகன், விசிக ஆ.தமிழ்க்குமரன் ஆகியோர் பங்கேற்றனர்.

தொடர்ந்து கழகத் தோழர் சாந்தி எழுதிய “அண்ண சொன்னவர்” புத்தகத்தை கழகத் தலைவர் வெளியிட பொள்ளாச்சி நகர மன்றத் தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன் பொற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் ஆனைமலை ஒன்றியக் கழகம் சார்பில் புரட்சிப் பெரியார் முழக்க ஏட்டிற்கு முதற்கட்டமாக ரூ.9000/- கழகத் தலைவரிடம் வழங்கப்பட்டது.

முன்னதாக சட்ட எரிப்புப் போராளி அய்யா ஆனைமலை ஆறுமுகம் அவர்களை அவரது இல்லத்தில் கழகத்தலைவர் மற்றும் தோழர்கள் சந்தித்து பயனாடை அணிவித்து நலம் விசாரித்தனர். கா.க.புதூரில் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஜாதி ஒழிப்பு மாவீரர்கள் நினைவுத் தூண் முன்பு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கொள்கை முழக்கங்கள் எழுப்பி ஜாதி ஒழிப்பு வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

**கோவை :** ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை கொளுத்தி சிறை சென்று சிறையிலும், சிறைக்கு வெளியேயும் உயிர் நீத்த போராளிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்வு கோவை காந்திபுரம் பெரியார் சிலை முன்பு தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் நவீன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பங்கேற்ற தோழர்கள் அனைவரும் ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். விசிக விடுதலைச் செல்வன், நெல்சன் மண்டேலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோபி :** ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை கொளுத்தி சிறை சென்று சிறையிலும், சிறைக்கு வெளியேயும் உயிர் நீத்த போராளிகளுக்கு வீரவணக்கக் கூட்டம் மற்றும் உறுதிமொழி ஏற்பு கூட்டம் கோபி பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் சிலை முன்பு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், மாவட்டத் தலைவர் நாத்திக சோதி, மாவட்ட செயலாளர் செல்வக்குமார் தலைமையில் ஈரோடு வடக்கு மாவட்ட கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**ஈரோடு தெற்கு :** ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை கொளுத்தி சிறை சென்று உயிர் நீத்த தோழர்களுக்கு நினைவேந்தல் நிகழ்வு 26-11-2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு சூரம்பட்டியில் நடைபெற்றது.

மாநகரத் தலைவர் திருமுருகன் தலைமை வகித்தார், மாநகரத் துணைத் தலைவர் சத்தியமூர்த்தி வரவேற்புரையாற்றினார். மாவட்டத் தலைவர் செல்வராசு, கமலி, விருதுநகர் செந்தில் ஆகியோர் தொடக்கவுரையாற்றினர்.

மாவட்டப் பொருளாளர் கிருஷ்ணன் பகுத்தறிவுப் பாடல்களை பாடினார்.

நிறைவாக கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி சட்ட எரிப்புப் போராளிகளின் தியாக வரலாற்றை நினைவு கூர்ந்தார்.

ஜோதி நன்றி கூறினார். ரவி, குமார், கணேசன், மீசை முருகேசன், பிரபு, இசைக் கதிர், விக்னேஷ், சந்தோஷ், கோகுல், கலையரசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**சென்னை :** 1957, நவம்பர் 26ல் தந்தை பெரியாரின் ஆணையை ஏற்று தமிழ்நாடு முழுவதும் ஜாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டப் பிரிவுகளை கொளுத்தி சிறை சென்ற – உயிர் நீத்த ஜாதி ஒழிப்புப் போராளிகளின் வீர வரலாற்றை நினைவு கூறும் விதமாக வீர வணக்கக் கூட்டம் 26.11.2023 ஞாயிறு மாலை 6 மணிக்கு இராயப்பேட்டை வி.எம்.தெரு பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி தலைமை வகித்தார்.



கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இ ர ா ே ச ந் தி ர ன் சட்ட எரிப்புப் போராட்டத்தின் தியாக வரலாற்றை நினைவு கூர்ந்தார்.

நிறைவாக ஜாதி ஒழிப்புப் போரா ளிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக கழகப் பொதுச் செயலாளர் நினைவுச் சுடரை ஏற்றினார். பங்கேற்ற தோழர்கள் அனைவரும் ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டத் தலைவர் வேழவேந்தன், கரு.அண்ணாமலை, சேத்துப்பட்டு இராசேந்திரன், தட்சணாமூர்த்தி, மயிலை இராவணன் மற்றும் கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**மதுரை :** மதுரை மாவட்டக் கழகம் சார்பில் ஜாதியைக் காப்பாற்றும் அரசியல் சட்ட பிரிவுகள் எரிப்பு நாள் உறுதியேற்பு நிகழ்ச்சி கண்ணன் காமாட்சி தலைமையில் நடைபெற்றது. தமிழ்தேச மக்கள் முன்னணி தலைவர் மீ.த.பாண்டியன், தோழர் ஆரோக்கிய மேரி, மாவட்ட காப்பாளர் தளபதி, வாசுகி, வேங்கை மாறன், பாலு உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**சேலம் :** நங்கவள்ளி ஒன்றியக் கழகம் சார்பில் நவம்பர் 26, அரசியல் சட்டப் பிரிவில் ஜாதியை பாதுகாக்கும் சட்டப் பிரிவை தீயிட்டு கொழுத்தி சிறை சென்று உயிர் நீத்த போராளிகளுக்கு வீரவணக்க நாள் தெருமுனைக் கூட்டம் நங்கவள்ளி பேருந்து நிலையத்தில் 26.11.2023 ஞாயிறு மாலை 5 மணிக்கு கழக தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன் தலைமையில் நடைபெற்றது. நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் பொ.கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞரணி தலைவர் சி.தங்கதுரை, வனவாசி நகர தலைவர் செந்தில்குமார், நங்கவள்ளி அ.செ.சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சேலம் மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள், தருமபுரி மாவட்ட செயலாளர் சந்தோஷ்குமார், சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு, சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தேவபிரகாஷ், தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் வழக்கறிஞர் செல்வகுமார், தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் ஆர்.எஸ்.நாகராஜ் ஆகியோர் சட்ட எரிப்பு நாள் குறித்து விளக்க உரையாற்றினர். நங்கவள்ளி அ.செ.சந்திரசேகரன் கூற கூட்டம் நிறைவு பெற்றது.

நங்கவள்ளி பகுதி ஒன்றிய பொறுப்பாளர் ராஜேந்திரன், குமார், சிவகுமார், நங்கவள்ளி நகர செயலாளர் பிரபாகரன், வனவாசி பகுதி நகர செயலாளர் உமாசங்கர், பன்னீர்செல்வம், கோகிலா, வெள்ளார் பகுதி சிவா, அருண், சர்மா, ஏற்காடு செல்வமூர்த்தி, மூலப்பாதை கவியரசு, கோகுல், தருமபுரி செல்வமணி ஆகியோர்.

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்டக் கழகம் சார்பாக ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை எரித்து சிறை சென்று உயிர் நீத்த போராளிகளுக்கு நினைவேந்தல் மற்றும் உறுதி மொழி ஏற்பு கூட்டம் 26.10.2023 ஞாயிறு காலை 9.30 மணிக்கு மாநகராட்சி அலுவலகம் அருகில் நடைபெற்றது

மாவட்டத் தலைவர் முகில் இராசு தலைமை தாங்கினார், தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் இராமசாமி முன்னிலை வகித்தார். கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் ஆகியோர் சட்ட எரிப்புப் போராளிகளின் தியாக வரலாற்றை நினைவு கூர்ந்தனர்.

நிகழ்வில் திராவிடர் கழக மாவட்டத் தலைவர் ஆறுச்சாமி, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் வீ.சிவகாமி, சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன், மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, புரட்சிகர இளைஞர் முன்னனி தமிழ் அமுதன், விசிக மாவட்டச் செயலாளர் ஏ.பி.ஆர் மூர்த்தி, திராவிடத் தமிழர் கட்சி மண்டலச் செயலாளர் கார்த்திக், மக்கள் பாதுகாப்பு இயக்கம் கார்மேகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாநகரச் செயலாளர் மாதவன் நன்றி கூறினார்.

சட்ட எரிப்புப் நாள் கருத்தரங்கம் மாலை 6 மணியளவில் ஆத்துப்பாளையம் காமாட்சி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : December 01, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran